[1979 பிப்ரவரி 26

செங்கற்பட்டு அருகே இரயில்வே மேம்பாலம்.

*வினா எண் 192—திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண் வினாக்களுக்குவடையளிப்பாரா—

(அ) சென்னை—திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் செங்கற்பட்டில் இரயில் பாதையின் குறுக்கே மேம்பாலம் கட்டும் திட்டம் உண்டா ?

(ஆ) ஆம் எனில், அதன் மதிப்பீடு எவ்வளவு ?

(இ) எப்பொழுது வேலை தொடங்கப்படும் ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ஆம்.

(ஆ) ரூ. 60 இலட்சம்.

(இ) இம்மேம்பாலம் அமைக்கும் பணியின் மதிப்பீடு மத்திய அரசாங்கத்தின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டுள்ளது. அரசு ஒப்புதல் கிடைத்தவுடன் பணி மேற்கொள்ளப்படும்.

திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : எந்த ஆண்டு எடுத்துக் கொள்ளப்படும் ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : 1974—75-ல் மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்ட பத்து பணிகளுக்கு இன்னும் மத்திய அரசு ஒப்புதல் அளிக்காத நிலை இருக்கிறது. தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் அந்த ஆண்டே, இந்த ஆட்சி பொறுப்பிற்கு வந்த பிறகு பலமுறை மத்திய அரசை வலியுறுத்தி இந்த அனுமதி தரும்படி மாநில அரசு கேட்டுக்கொண்டிருக்கிறது. இந்நிலையில் மத்திய அரசு எப்போது ஒப்புதல் தருகிறதோ அப்போதுதான் இது மேற்கொள்ளப்படும்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கேள்விகளுக்கெல்லாம் மூன்று ஆண்டுகளாக எதிர்பார்க்கிறோம். நாங்கள் வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே வலியுறுத்துகிறோம், எதிர்பார்க்கிறோம், கேட்கிறோம் என்பதற்குப் பதிலாக இதை அமல்படுத்த அவர்களை ஒத்துக்கொள்ளக்கூடிய வகையில் வேறு ஏதாவது முறைகளைக்

1979 பிப்ரவரி 26]

கையாள இந்த அரசு முன்வருமா? மூன்றாண்டுகளாக வரும் வரும் என்று வலியுறுத்துகிறோம், கேட்கிறோம் என்பதற்குப் பதிலாக அவர்களை ஒத்துக்கொள்ளக் கூடிய வகையில் செய்வதற்கு வேறு ஏதாவது முறையைக் கையாண்டு அவர்களை ஒத்துக் கொள்ளவைக்க முயற்சிப்பார்களா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : அஞ்சல் மூலம் வலியுறுத்துவதோடு நின்றுவிடாமல் டெல்லி சென்று சம்பந்தப் பட்ட அமைச்சர் அவர்களை நேரில் சந்தித்து இதுபற்றி தீவிர உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும் என இதன் தேவையை வலியுறுத்தி ஏற்கனவே கூறப்பட்டிருக்கிறது. நாடாளுமன்ற உறுப்பினர்கள்கூட நாடாளுமன்றத்தில் இதுபற்றி கேள்விகள் எழுப்பி அமைச்சர் அவர்களைச் சந்தித்து வலியுறுத்தி வருகிறார்கள். இன்னும் கடுமையான முறையில் மத்திய அரசு உணரக்கூடியவகையில் எந்த வகையில் இதை மத்திய அரசின் கவனத்திற்குக் கொண்டுவரவேண்டுமோ அப்படிக் கொண்டுவர கண்டிப்பாக மாநில அரசு முயற்சியினை மேற்கொள்ளும்.

வைகைத் திட்டத்தின்கீழ் உள்ள துணைக் கால்வாய்கள்.

* வினா எண். 193.– திரு. வ. மு. சுப்பிரமணியன் : மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா —

(அ) வைகை சீரமைப்புத் திட்டத்தின்கீழ், விரகனூர் மதகு அணையிலிருந்து வெட்டப்பட்ட துணைக் கால்வாய்கள் சென்ற வெள்ளத்தில் பாதிக்கப்பட்டதினால் அரசுக்கு இழப்பு எவ்வளவு?

(ஆ) இத்திட்டத்தை சரியாக செயல்படுத்தாததுதான் அதிக இழப்புக்கு காரணமா?

(இ) ஆம் எனில், அதன் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :

(அ) சுமார் ரூ. 20 லட்சம்.

(ஆ) இல்லை. அவ்வாறு சொல்ல முடியாது.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

* வினா எண். 194 —திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சா கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா —

(அ) வைகை ஆற்றுப் பகுதியில் துணைக்கால்வாய்கள் எவையேனும் வெட்டப்பட்டனவா?